1981 மார்ச் 25]

சதவிகிதம் எனப்படும் பூச்சி மருந்து தெளிக்கப்பட்டு இருக்கிறது பொது சுகாதாரத்துறையினரும், மருத்துவத் துறையினரும் தேவையான எல்லா நடவடிக்கைகளும் எடுத்துள்ளனர். எனவே எந்தவித பதட்டமும் அடையத் தேவையில்லை எனக் கூறிக்கொள்கிறேன்.

இணைப்பு II.

[272 ஆம் பக்கத்தில் இனம் 4 (2)-க்கான அடிக்குறிப்பைக்காண்க.]

அண்மையில் மத்திய அரசு ஏற்படுத்திய பெட்ரோல் விலை உயர்வின் காரணமாக 10—2—1981 நாளிட்ட உள்துறை அரசாணை எண். (பல்வகை) 288-ல் ஆட்டோரிக்ஷா மற்றும் டாக்சி கட்டணத்தை பின்கண்டவாறு மாற்றி அமைக்க மாநிலப் போக்குவரத்து அதிகார மன்றத்திற்கு ஓர் வரைவு கட்டளையைப் பிறப்பித்துள்ளது:

ஆட்டோரிக்ஷா.

1. குறைந்தபட்ச கட்டணம் ரூ. 1.70
2. ஒரு கி. மீ. தூரத்திற்கு—ரூ. 0.80
3. நிறுவை கட்டணம்—பத்து நிமிடங்களுக்கு பத்து காசுகள்

டாக்சி.

1. குறைந்தபட்ச கட்டணம்—ரூ. 3.00
2. ஒரு கி. மீ. தூரத்திற்கு—ரூ. 1.50
3. நிறுவைக்கட்டணம்—ஐந்து நிமிடங்களுக்கு பத்து காசுகள்

மேற்கூறிய வரைவு கட்டளையின் மீது ஒரு மாத காலத்திற்குள் பெறப் படும் ஆலோசனைகளையும், மறுப்புகளையும் பரிசீலித்து இக்கட்டளை ஊர்ஜிதம் செய்யப்படும்.

மறுப்புகள் மற்றும் ஆலோசனைகளின் மீதான நேரடி கலந்தாலோசனையை (Oral hearing) தலைமை செயலகத்தில் பத்தாவது மாடியிலுள்ள மாநாட்டுக் கூடத்தில் 30—3—1981 அன்று காலை 11.00 மணிக்கு உள்துறை செயலாளர் நடத்துவார்.

4. பொதுவாகவே காவல்துறையினருக்கும்; போக்குவரத்து அதிகாரிகளுக்கும் இதை கண்காணிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அரசு நிர்ணயித்துள்ள கட்டணத்தைக் காட்டிலும் அதிக கட்டணத்தை கேட்கும் தனிப்பட்ட ஓட்டுனர்கள் மீது புகார்கள் கொண்டு வரப்படுமாயின் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். உறுப்பினர்களின் புகார் பொதுவானதாக உள்ளதால் குறிப்பிட்ட நடவடிக்கை எதும் எடுக்க இயலாது.